**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | மனைப்பொருளியல் - I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ *1 – 50* **வரையான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**

01. வீட்டில் இயக்கைத் தன்மையும் தொழிற்பாட்டுத் தன்மையும் அடைவதற்குரிய வழி
   1) வரவேற்பறை சுவருக்கு கண்ணாடித்திண்மங்கள் பொருத்தல்.
   2) சிற்ப வேலை நிறைந்த உலோகக் கைபிடிகளைப் படிக்கட்டுகளுக்குப் பொருத்தல்.
   3) வரவேற்பறையில் நீழ்வீழ்ச்சியுடனான உள்ளகக் குளம் அமைத்தல்.
   4) தோட்டத்திற்கு அலங்கார ஒட்டுத்தளங்கள் பயன்படுத்தல்.
   5) தோட்ட இருக்கையாக விழுந்த மரத்தின் குற்றிகளைப் பயன்படுத்தல்.

02. வீடொன்றின் வெவ்வேறு இடங்களை அலங்கரிப்பதற்கு சில மலர் ஒழுங்குகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் மிக உகந்த மலர் ஒழுங்கு
   1) விறாந்தையின் நுழைவாயிலில் செயற்கை மலர் ஒழுங்கமைப்பு.
   2) படுக்கையறையின் கண்ணாடி மேசைக்கு உலர் மலர் ஒழுங்கமைப்பு.
   3) சாப்பாட்டு மேசைக்கு இலை கொண்ட கிளைகளையுடைய உயர்ந்த மலர் ஒழுங்கு.
   4) நடைபாதையின் இருண்ட மூலைக்கு உலர் பூக்களால் அமைக்கப்பட்ட மலர் ஒழுங்கு.
   5) வரவேற்பறை ரீபோவிற்கு பதிவான பரந்த மலர் ஒழுங்கு

agaram.lk

03. ஓர் இணைந்த வீட்டின் சதுரமான படுக்கையறையை விசாலமானதாகக் காட்டப் பொருத்தமான முறை.
   1) நான்கு சுவர்களுக்கும் இளநிறங்கள் பயன்படுத்தல்.
   2) நிலத்திற்கும் அடுத்துள்ள இரண்டு சுவர்களுக்கும் கடும் நிறம் பயன்படுத்தல்.
   3) பாவு, நிலம் என்பவற்றிற்கு கடும் நிறம் பயன்படுத்தல்.
   4) இரு சமாந்தர சுவர்களுக்கும் இள நிறம் பயன்படுத்தல்.
   5) நான்கு சுவர்களுக்கும் பிரகாசமான நிறங்கள் பயன்படுத்தல்.

04. பின்வருவன வீடுகளில் அவதானிக்கப்பட்ட சில கட்டமைப்பு இயல்புகள்
   A. அறைகளில் உயரம் கூடிய யன்னல்கள் அமைத்தல்.
   B. படிக்கட்டின் கீழுள்ள இடத்தை வாசிப்பு அறையாகப் பயன்படும்.
   C. படுக்கையறையில் சுவர்ச்சிற்றலுமாரிகள் அமைத்தல்.
   D. ஊர்திச்சாலையும், விறாந்தையும் மடிக்கக்கூடிய கதவினால் பிரிக்கப்பட்டுள்ளமை.
   E. யன்னல் கதவுகள் எதிர் எதிர்ச் சுவர்களில் அமைந்துள்ளமை.

   மேலேயுள்ள அமைப்புக்களில் நெகிழும் தன்மையைக் குறிக்கும் அமைப்பும்

   1) A B    2) A C    3) B D    4) C D    5) D E

05. இலங்கையில் வீட்டு மின்சுற்றுக்கான மின்னழுத்தம் மின்னோட்டமும் முறையே

1) 230V 5 – 15 அம்பியர் 2) 200V 15 – 20 அம்பியர் 3) 250V 10 – 20 அம்பியர்

4) 300V 20 – 30 அம்பியர் 5) 200V 5 – 15 அம்பியர்

06. வீட்டிற்கு வழங்கப்படும் மின் இணைப்பு தொடர்பாக L N E குறியீடுகள் கொண்ட கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் குறிக்கும் கம்பி வகை

1) நடு நிலைக்கம்பி, உயிர்க்கம்பி, புவிக்கம்பி

2) உயிர், நடுநிலை, புவிக்கம்பி 3) புவி, நடுநிலை, உயிர்க்கம்பி


4) புவி, உயிர், நடுநிலைக்கம்பி 5) உயிர், புவி, நடுநிலைக்கம்பி

07. வீட்டுக் கழிவகற்றல் முறைமூலம் மீதேன் வாயு, உயிர்வாயு என்பன தயாரிக்க பற்றீரியா, பங்கசு உதவுகிறது. மேற்படி வாயு தயாரிப்பிற்கு உகந்த கழிவகற்றல் முறை எது?

1) உக்கல் முறை 2) புதைத்தல் முறை 3) எரித்தல் முறை

4) இரசாயன முறை 5) இயந்திர முறை

08. அமினோ அமிலத்தின் பொதுவான கட்டமைப்புச் சூத்திரம் கீழே தரப்பட்டுள்ளது.



மேலேயுள்ள அமைப்பில் ‘R’ குறிப்பது.

1) அற்கைல் தொகுதி 2) அமிலத்தொகுதி 3) அமைனோ தொகுதி

4) கிளைசின் தொகுதி 5) அலனின் தொகுதி

agaram.lk

09. ஒமேகா 6 அமிலம் தொடர்பான சரியான கூற்று

1) இதய நோய் ஏற்படும் 2) மீனில் உள்ளது 3) குருதி உறைதலுக்கு உதவும்

4) இரட்டைப் பிணைப்புடையது 5) அல்பா லினோலெனிக்கமிலம் உருவாகும்.

10. இரண்டு குளுக்கோசு மூலக்கூறுகள் இணைந்து ஒரு மூலக்கூறு நீரை வெளியேற்றுவதால் உருவாவது

1) பிறற்றோசு 2) சுக்குரோசு 3) இலற்றோசு 4) மோல்ற்றோசு 5) கலற்றோசு

11. குறிப்பிட்ட உணவுக்கு செறிவுள்ள நைத்திரிக்கமிலம் $(HNO_3)$ சொற்பளவு சேர்க்கும் போது மஞ்சள் நிறமாகும். இது எவ்வாறான பரிசோதனை முறை என இனம் காண்க.

1) புரதப் பரிசோதனை 2) கொழுப்புப் பரிசோதனை 3) காபோவைதரேற் பரிசோதனை

4) குளுக்கோசுப் பரிசோதனை 5) சுக்குரோசுப் பரிசோதனை

12. கீழே சில தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளன

A. நொதியங்களின் தொழிற்பாடு B. தசையிழையங்களின் தொழிற்பாடு

C. DNA புரதத் தொகுப்பு

மேலேயுள்ள தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் கனியுப்பு எது?

1) கல்சியம் 2) குளோரின் 3) சோடியம் 4) மக்னீசியம் 5) கந்தகம்

13. உயிர்ச்சத்து B 9 குறிப்பது

1) தயமின் 2) நயசின் 3) பிரிடொக்சின் 4) பயோட்டின் 5) போலிக்கமிலம்

14. 3 – 10 வரையான மொனோ சக்கரைட் கூறுகள் சேர்வதனால் உருவாகும் சக்கரைற் வகை.

1) மொனோ சக்கரைட் 2) ஒலிகோ சக்கரைட் 3) பொலிசக்கரைட்
4) டைசக்கரைட் 5) பல்சக்கரைட்

15. உணவாக உட்கொள்ளக் கூடிய சில நார்ப்பதார்த்தங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A - பெத்தின் D - இலிக்கனின் C – பிசின் D – அரைச் செலுலோசு C – செலுலோசு
இவற்றுள் நீரில் கரையக் கூடிய நார்ப் பொருட்கள் எவை

1) A B 2) A E 3) B D 4) D E 5) E C

16. விற்றமின் B தொகுதி குறைபாட்டினால் ஏற்படும் நோய் அறிகுறிகள்

1) வெளிர்தல், களைப்பு 2) மாலைக்கண், வயிற்றோட்டம் 3) கால்விறைப்பு, மலச்சிக்கல்
4) உடல் வீக்கம், வளைந்த கால்கள் 5) தோல் வரட்சி, தலைமயிர் உதிர்தல்

17. அரிசி, சோளம், போஞ்சி ஆகியவற்றில் அடல்கியுள்ள புரதவகை முறையே

1) கேசின், குளுட்டட்டனின், அக்டின் 2) மயோசின், குளுட்டனின் கொலஜன்
3) ஓராய் செனின், செயின் லெகுயூமின் 4) செயின், கேசின் அக்டின்
5) செயின், லெகுயூமின், ஓராய்செனின்

18. பின்வரும் உணவு மூலகங்களில் இதய நோயாளியின் உணவு வேளைகளில் இடம் பெறத்தக்க உணவு மூலம்

1) மாஜரின் 2) தயிர் 3) கோழி இறைச்சி 4) சமன் 5) இறால்

agaram.lk

19. மரவள்ளிக் கிழங்கு அவிக்கும் போது பாத்திரத்தின் மூடியைத்திறந்து சமைப்பதன் மூலம் நஞ்சூட்டலில் இருந்து பாதுகாக்கப்படும் இரசாயனச் சேர்வை எது?

1) போலிக்கமிலம் 2) ஐதரோசயனிக்கமிலம் 3) நிக்கடொனிக்கமிலம்
4) பந்தோனிக்கமிலம் 5) அசுக்கோபிக்கமிலம்

20. ஜாம் தயாரிக்கும் போது அதன் இழையமைப்புக்குக் காரணமான காபோவைதரேற் எது?

1) செலுலோஸ் 2) பெக்ரின் 3) இலற்ரோசு 4) பிசின் 5) மாப்பொருள்

21. பின்வருவனவற்றுள் கூடியளவு இரும்பு கொண்ட உணவு

1) பொன்னாங்காணி 2) தம்பலா 3) அகத்தி 4) வல்லாரை 5) பசளி

22. பூசனிக்காய், முள்ளங்கி, அகத்தி என்பனவற்றில் காணப்படும் நிறப் பொருள் முறையே

1) கரட்டினோயிட், அற்தோசயனின், குளோரபில்
2) கரட்டினோயிட், குளோரபில் பிளேவோன்
3) கரட்டினோயிட் பிளேவோன் குளோரபில்
4) குளோரபில், பிளேவோன், கரட்டினோயிட்
5) கரட்டினோயிட், பிளேவோன், அற்தோசயனின்

23. தரப்பட்ட பொதியிடு பதார்த்தங்களை அவதானித்து கேட்கப்படும் வினாவுக்கு விடைதருக.

A – உலோகம் B – கண்ணாடி C – தடித்த பிளாஸ்ரிக்

D – மெல்லிய பிளாஸ்ரின் E – காட்போட்

மேலேயுள்ளவற்றில் அரைவன் பொதியிடும் பதார்த்தங்கள் எவை?

1) A, B 2) B, C 3) C, E 4) A, E 5) D, E

24. பொதிகளின் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது

- நெகிழ்வுத் தன்மை
- சூடாக்கும் போது சுருங்கும்
- மெழுகுத்தன்மை
- மலிவானது

மேலேயுள்ள இயல்புகளையுடைய பொதிவகை யாது.

1) தடிப்பான பொலித்தீன் 2) தடிப்பு குறைந்த பொலித்தீன் 3) அடரிடப்பட்ட படலம்
4) பிளாஸ்ரிக் 5) பொலிபுரொபிலின்

25. அமைதியான ஆட்கொல்லி நோய் எனப்படுவது எது?

1) இரைப்பை சுழற்சி 2) நீரிழிவு 3) உயர்குருதி அமுக்கம்
4) வயிற்றோட்டம் 5) மலச்சிக்கல்

26. வளர்ந்த ஒருவருக்குப் பொருத்தமான சராசரி உடற்திணிபுச் சுட்டி

1) 18.5 லும் குறைவு 2) 18.5 லும் கூட 3) 18.5 – 24.9 4) 25 – 29.99 5) 18.5 – 30

27. சத்தூட்டலுக்காக மாஜரீனுடன் சேர்க்கப்படும் விற்றமின்கள்

1) A, D 2) A, B 3) B, C 4) D, E 5) A, K

agaram.lk

28. போசாக்கற்ற சுவையூட்டி எது?

1) மஞ்சள் 2) சோடியம் 3) சக்ரீன் 4) கறுவா 5) ஸ்ரோபரி

29. உணவில் அடங்கியுள்ள திண்மப் பதார்த்தங்களைக் கரைக்கப்பயன்படுவது

1) குளுக்கோசு 2) கிளிசரோல் 3) கிளைக்கோசன் 4) பிறற்ரோசு 5) மாப்பொருள்

30. கொறக்காய்ப்புளியில் உள்ள அமிலம் யாது?

1) தாத்தாரிக்கமிலம் 2) சித்தரிக்கமிலம் 3) போலிக்கமிலம்
4) அசுக்கோபிக்கமிலம் 5) அரக்கிடோனிக்கமிலம்

31. சமிபாட்டின் போது பால் திரைந்து கேசினாகத் தோன்றும் செயற்பாட்டைச் செய்யும் உறுப்பு எது?

1) ஈரல் 2) இரைப்பை 3) சிறுகுடல் 4) பெருங்குடல் 5) பித்தப்பை

32. பெருங்குடலில் வாழும் பற்றீரியாக்கள் எவ்வகை விற்றமின்களைத் தொகுக்கும்?

1) $B_6 , K$ 2) $B_9 , B_6$ 3) $B_9 , K$ 4) $A, C$ 5) $B_1 , C$

33. சமையல் முறைகளில் பாபிக்கியூ வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

1) தீச்சுவாலையில் சுடுதல் 2) தணலில் சுடுதல் 3) வாட்டுதல்
4) க்ரீல் செய்தல் 5) வேகவைத்தல்

34. பின்வருவனவற்றில் எவ்வகைச் செயற்பாட்டில் ஜெலற்றீனாக்கம் நடைபெறும்?
1) முட்டை வெண்கருவை அடிக்கும் போது
2) ஜாம் தயாரிக்கும் போது
3) உருளைக் கிழங்கு அவிக்கும் போது
4) மாஸ்மலோ தயாரிக்கும் போது
5) மீன் பொரிக்கும் போது

35. முன்பிள்ளைப் பருவப் பிள்ளையின் இயல்பு எனக்கருதப்படுவது
1) குழந்தை நிலையில் வளர்ச்சி அதிகரித்தல்
2) சகபாடிகளுடன் இணைந்திருத்தல்
3) தனிமையை நாடுதல்
4) மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்
5) புதுமையை அறியும் ஆர்வம்

36. தன்னைச் சுற்றியுள்ள சூழலை அறிந்து கொண்டு அங்குவெற்றிகரமாக வாழ்வதற்குத் தேவையான இசைவாக்கத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ளும் திறன்.
1) உடல் வளர்ச்சி
2) உள வளர்ச்சி
3) நுண்ணறிவு வளர்ச்சி
4) மொழி வளர்ச்சி
5) சமூக வளர்ச்சி

37. பிள்ளைப் பருவத்தினரின் உடல் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தாத காரணியாக அமைவது?
1) கிடைக்கும் வாய்ப்பு
2) ஒத்த வயதுச் செயல்கள்
3) பாலியல்பண்பு
4) போசாக்கு
5) பரம்பரை

38. உடலியல், உளவியல் தேவை பூரணமாக அடைந்த பிள்ளையில் நீர் காணும் இயல்பு
1) ஆளுமை
2) சிரிப்பு
3) கோபம்
4) படம் வரைதல்
5) மணி கோர்த்தல்

39. பிள்ளைகளிடம் காணப்படும் சில பேச்சுக் குறைபாட்டை நீக்க முடியாது. இதற்குக் காரணமான விடயம்
1) சுற்றாடல்
2) பரம்பரை
3) மனவெழுச்சி
4) சமூகம்
5) உணவியல்

40. சமூக விரோதச் செயல்களில் கட்டிளமைப் பருவத்தினர் ஈடுபடக் காரணியாய் அமைவது
1) கூடிய பாதுகாப்புடன் வளர்க்கப்படும் குடும்பச்சூழல்
2) பெற்றோர் பிள்ளைகளின் எதிர்பார்ப்பு ஒன்றாயிருத்தல்
3) மனவெழுச்சி தேவைகள் பூர்த்தி செய்யப்படல்
4) சீர் குலைந்த குடும்பச்சூழல்
5) சுதந்திரமான குடும்பச் சூழல்

41. இளைஞர்களிடம் மனதை தூண்டும் கருத்து அல்லது உணர்ச்சிகள் தடைப்படுவதினால் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படும் நிலைமை உண்டாகின்றது. இதற்கு வழங்கிய பெயர்
1) நெருக்கிடை
2) பதகளிப்பு
3) பொறுமையின்மை
4) தகைப்பு
5) விரக்தி

42. பகற் கனவு காணல், தீர்மானங்கள் தாமாக எடுத்தல், தனிமையை நாடல், தன்னிச்சையாக செயற்படல் போன்ற குணங்கள் பெரும் பாலும் எப்பருவத்தினரிடம் அதிகமாக காணப்படும்
1) முன் பிள்ளைப்பருவம்
2) பின் பிள்ளைப்பருவம்
3) கட்டிளமைப்பருவம்
4) குழந்தைப்பருவம்
5) வளர்ந்தோர் பருவம்

agaram.lk

43. வட்ட வடிவமான உரு உடையது, மத்தியில் கனுக்களால் நிரம்பியுள்ளது குறுக்குப் பக்கத்தோற்றமுடைய நார்

1) பருத்தி 2) இலினன் 3) நைலோன் 4) பட்டு 5) கம்பளி

44. தைக்கும் போது ஊசியைச்சுற்றி நூலைப்பின்னும் விதத்திற்கு சமமான தன்மையைக் காட்டுவது எவ்வாறான தையல் ஆகும்.

1) அடுக்கு நாணயவுருத்தையல், சங்கிலித்தையல்
2) பிரான்சிய முடிச்சு, அடுக்கு நாணயவுருத்தையல்
3) சங்கிலித்தையல், நரம்புத்தையல்
4) பிரான்சிய முடிச்சு, நரம்புத்தையல்
5) தனி சங்கிலித்தையல், சங்கிலித்தையல்

45. மார்பு அளவு 85cm உள்ள பெண்ணொருவருக்கு உடற்பகுதியின் முன்பக்க அடிப்படை மாதிரியுருவை வரைவதற்கு கணிக்கப்பட்ட மார்பளவு

1) 20.5cm 2) 21.2cm 3) 22.5cm 4) 23.3cm 5) 24.7cm

46. துணியானது பயன்பாட்டின் போது கழுவுதலில் ஏற்படும் சருக்கத்தைத் தடுப்பதற்கு மேற்கொள்ளும் பொறிமுறைச் செயற்பாடு

1) உருளை நேர்த்தி 2) சன்பரைஸிங் 3) அழுத்துதல்
4) இழுத்து நேர்த்தியாக்கல் 5) விடுவிப்பு அச்சிடல்

47. மினுக்கிய நேர்த்தி தொடர்பான பிழையான கூற்று எது?

1) பருத்தி நார் 12% செறிவுள்ள சோடியம் காபனேற் கரைசலில் இடப்படுகிறது.
2) பருத்தி நார் 12% செறிவுள்ள சோடியம் ஐதரொக்சைற் கரைசலில் இடப்படுகிறது.
3) இது $70^{\circ}f - 80^{\circ}f$ மாறா வெப்பநிலையில் கரைசல் பேணப்படும்
4) பருத்தி நார் 2 – 3 நிமிடங்கள் அமிழ்த்தி வைக்கப்படுகிறது.
5) மினுக்கிய நேர்த்தியை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் ஜோன் மேசர்

48. துணிகளுக்குச் சாயமிடுவதற்கு நிறங்களைத் தெரிவு செய்யும் போது அவற்றக்குரிய பண்புகளில் பொருத்தமற்றது

1) சூரிய ஒளிக்கு ஈடுகொடுக்கக் கூடியது 2) வியர்வைக்கு ஈடுகொடுக்கக் கூடியது
3) பொருளாதார நிலைக்குப் பொருத்தமானது 4) சலவைக்குப் பொருத்தமானது
5) அழுத்துவதற்குப் பொருத்தமானது

49. கைத்துடைப்பம் ஒன்றின் ஆகக் குறைந்த நீள அகலம் யாது?

1) 25 cm 2) 20 cm 3) 50 cm 4) 35 cm 5) 30 cm

50. மேசை விரிப்பு ஒன்றின் கீழே தொங்கும் அளவும் விளிம்பின் மடிப்பின் அளவும் முறையே எவ்வாறு அமையும்.

1) 12” 2 ½ ” 2) 10” 2” 3) 15” 3” 4) 16” 4” 5) 8” 1”

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | மனைப்பொருளியல் - II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

## பிரிவு I

❖ *1ம் வினா உட்பட 3 வினாக்களுக்கு விடை எழுதுக.*

01. கருக்குடும்பத்தைச் சேர்ந்த கமல் என்பவர் நான்கு பிள்ளைகளுடனும் தனது மனைவியுடனும் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வருகிறார். அவரது குடும்பம் சகல செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செய்வதுடன் சகல வசதிகளுடனும் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர்.
   1) கமலின் குடும்பம் ஆரோக்கியமாக வாழ உதவிய மனைத்திட்டமிடற் கோட்பாடுகள் எவை?
   2) மனையில் வாழ்வோரது தனித்துவமும், சுதந்திரமும் பேணப்படும் முறையில் மனையின் பகுதிகள் எவ்வாறு அமைய வேண்டும்?
   3) மேற் கூறப்பட்ட குடும்பத்தில் சுகநலம் பேணப்பட்டு ஆரோக்கியமாக இருப்பதற்கு ஏதுவான அம்சங்கள் எவை?
   4) A – மனையில் பயன்படுத்தப்படும் இல்லத் துணிமணிகளை நேர்த்தியாக்கும் முறைகள் மூன்று தருக.
      B – நேர்த்தியாக்கல் முறைகளைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பயன்கள் எவை?
   5) இல்லத்துணையணிகள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்படும் முன்திட்டங்கள் எவை?

(5+5+5+(3+3)+4=25புள்ளிகள்)

02. 1) துணி நெசவு செய்யப்பட்டுள்ள நூல் எவ்வகை நார் என்பதை இனம் காணும் முறைகள் எவை?
   2) சேலைக்கான இரவிக்கையின் மாதிரி உருவைப் பயன்படுத்தி துணியை வெட்டும் படிமுறைகளைக் குறிப்பிடுக.
   3) துணி மேற்பரப்பு அலங்காரத்திற்குப் பயன்படுத்துகின்ற வடிவமைப்பு முறைகள் எவை?
   4) அலங்காரத்தையல் முறைகளை ஆரம்பித்தல் நிறைவு செய்தல் செயற்பாடுகளில் அவதானிக்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

03. 1) "வீட்டுப்பாவனைக்கு மென்னீரே பொருத்தமானது"
   சுத்தமான குடிநீரின் இயல்புகள் எவை?
   2) மனையிலிருந்து அகற்றப்படும் மீன்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் கழிவுப் பொருட்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக.
   3) A – கழிவுப்பொருட்களை முறைப்படி அகற்றாமையால் ஏற்படக்கூடிய விளைவுகள் எவை?
      B – கழிவுப்பொருட்களை முகாமை செய்வதில் வீட்டு மட்டத்தில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் எவை?

(6+6+4+4=20புள்ளிகள்)

agaram.lk

04. 1) "சேதனத் திரவங்கள் பயன்படுத்தி உலர் சலவை செய்யப்படுகிறது"

A - உலர் சலவைக் காரணிகளில் இருக்க வேண்டிய இயல்புகள் எவை?

B - உலர் சலவைக் காரணிகள் பயன்படுத்துவதன் நோக்கங்கள் எவை?

C - உலர் சலவைத் தொழிற்பாட்டின் பிரதான படிமுறைகள் எவை?

2) "மின்சக்தி பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதனால் இலகுவாக கருமங்கள் மேற் கொள்ளப்படுகின்றது".

A - மின்சக்தியின் நிலை மாற்றங்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

B - நுண்ணலைக் கலைடுப்பின் பயன்பாடு எவ்வாறு ஆரம்பமானது?

C - மின் உபகரணங்களின் நீடித்த பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

3) கூட்டுப்பசளை தயாரிக்கும் முறைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக?

(I 2½ x 3=7½ II 2½ x=3 7½ III ½ x3=1½ )

விளக்கம் = 3½)

(மொத்தம் = 20 புள்ளிகள்)

## பிரிவு II

❖ **5ம் வினா உட்பட மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடைதருக.**

05. தாய் தந்தை இருவரும் தொழிலுக்குச் செல்பவர்கள் இவர்களுக்கு கட்டிளம் பருவம் முன்பள்ளிப் பருவத்தையுடைய இரு பிள்ளைகள் உள்ளனர். இக்குடும்பத்திற்கு ஏற்ற போசணை மிக்க உணவுகளைத் தயாரிப்பதில் மனையாள் மிகவும் திறமையுடையவள்.

1) இக்குடும்பத்திற்குப் பொருத்தமான மதிய உணவுப் பட்டியல் ஒன்றினைத் திட்டமிடுக.

2) A - உணவு வேளைகளைச் சிறப்பாகத் திட்டமிட வழிகாட்டியாக உள்ள மூலாதாரங்கள் எவை?

B - நாளாந்த போசணைத் தேவை அட்டவணை என்றால் என்ன?

3) சமிபாட்டுச் செயற்பாட்டின் போது புரதம் எங்கே எவ்வாறு அகத்துறிஞ்சப்படுகிறது?

4) A - நீரிழிவு நோய் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

B - நீரிழிவு நோயாளியின் உணவில் தவிர்க்கப்பட வேண்டிய உணவுவகைகளைக் குறிப்பிடுக.

(4+(3+2)+(1+3)+5+(3+4) =25புள்ளிகள்)

06. 1) பின்பிள்ளைப்பருவப் பிள்ளை வெளிக்காட்டும் மனவெழுச்சிகள் எவை?

2) மொழிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

3) A - பிள்ளைப்பருவ சமூக விருத்தியின் போது காணப்படும் பல்வேறு நடத்தைக் கோலங்கள் எவை?

B - மாணவர்களின் ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களால் ஆற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் எவை?

(6+6+(4+4) =20புள்ளிகள்)

07. 1) பொதிகள் பயன்படுத்துவதன் நோக்கம் யாது? பொதி வகைகள் எவை?

2) பொதியிடு பதார்த்தங்கள் எத்தனை வகை? அவை எவை?

3) A - பொதியிடுவதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?

B - பொதியிடு பதார்த்தங்களைத் தெரிவு செய்யும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் எவை

(6+6+(4+4) =20புள்ளிகள்)

08. 1) காபோவைதரேற் அட்டவணையை கோட்டுப்படமூலம் விளக்குக.

2) A - ஒமேகா 3 அமிலங்கள் எத்தனை வகைப்படும். அவற்றைக் குறிப்பிடுக.

B - ஒமேகா 3 கொழுப்பு அமிலத்தின் சிறப்பு இயல்பு யாது?

3) A - அமினோ அமிலத்தின் கட்டமைப்புச் சூத்திரத்தைக் குறிப்பிட்டு அதனை விளக்குக.

B - புரதத்தின் தொழில்கள் 3 தருக?

(5+(4+3)+(5+3)=20புள்ளிகள்)

09. 1) இலங்கையில் நிலவும் போசணைப் பிரச்சினைகள் எவை?

2) குருதிச் சோகை நோயினால் பாதிக்கப்பட்டோர் வீதாசாரத்தைக் குறிப்பிடுக.

அ - முன் பாடசாலைப் பிள்ளைகள்

ஆ - கட்டிளம் பெண்கள்

இ - கர்ப்பிணித் தாய்மார்

3) A - ‘‘பிள்ளையொன்று 7 வயதாகும் போது தன்மையான பேச்சு முறையிலிருந்து நீங்கி சமூகமயமான பேச்சின்பால் கவனம் செலுத்துவர்.
சமூகமயமான பேச்சின் நான்கு அம்சங்களையும் குறிப்பிடுக?

B - கட்டிளம் பருவத்தினர் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் எவை?

(6+6+(4+4) =20புள்ளிகள்)

agaram.lk